விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 043 வள்ளுவர் ஆண்டு 2054 தை 17 செவ்வாய்க்கிழமை (31.01.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## நாடு முழுவதும் இன்று மின்வெட்டு இல்லை

(கொழும்பு)

நாடு முழுவதும் இன்று மின்வெட்டு அமுலாக் கப்படமாட்டாது என இலங்கை மின்சார சபையின் தலைவர் அறிவித்துள்ளார்.

மேலதிக மின்னுற்பத்திக்கான நீரை, நீர்த்தேக்கங்களில் இருந்து வெளியேற்ற நீர் 11

## ஊடகவியலாளர் நிபோஜிதன் ரயில் விபத்தில் மரணம்



(கொழும்பு)

கொழும்பில் இடம் பெற்ற ரயில் விபத்தில் கிளிநொச்சி முரசு மோட்டையைச் சேர்ந்த ஊடகவியலா ளார் நிபோஜி 11

## உள்ளூராட்சி தேர்தலை கண்காணிப்பதற்கு
### 4 அமைப்புகளுக்கு அனுமதி

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலை கண்காணிப்பதற்காக நான்கிற்கும் மேற்பட்ட அமைப்புகளுக்கு அனுமதி வழங்கப்படும் என தேசிய தேர் 11

# 'கொலை அச்சுறுத்தல் நம்பிக்கையை குலைக்கும்'

## தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கான அச்சுறுத்தல் தொடர்பில் பஃவ்ரல் அமைப்பு

(கொழும்பு)

**தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு விடுக் கப்பட்ட கொலை அச்சுறுத்தல் பொதுமக்களின் நம் பிக்கையை சீர்குலைக்கும் என பஃவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.**

PAFFREL

தேர்தலை நடத்தாமல் இருப் பதற்கு அரசாங்கம் முயற்சித்து வரும் சூழலில், தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் களுக்கு விடுக்கப்பட்ட உயிர் அச் சுறுத்தல் தொடர்பான விசார ணைகளின் தாமதமானது மக் களின் நம்பிக்கையைச் சீர் குலைக்கும்.

அத்தோடு இது புலனாய்வுப் பிரிவினரை பெரும்பான்மை யாகக் கொண்ட பொலிஸாரின் பெருமையையும் கேள்விக்குள் ளாக்கும் என்று பஃவ்ரல் அமைப்பு பொலிஸ்மா அதிபரிடம் சுட்டிக் காட்டியுள்ளது.

தேர்தல் ஆணைக்குழு உறுப் பினர்களின் பாதுகாப்பு தொடர் பில் பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரத்னவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே பஃவ் ரல் அமைப்பு இதனைக் குறிப் பிட்டுள்ளது.

உயிர் அச்சுறுத்தலுக்குள் ளான தேர்தல் ஆணைக்குழு வின் உறுப்பினர்களுக்கு விரை வில் தகுந்த பாதுகாப்பினை வழங்குமாறு பஃவ்ரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (ம-7)

## குறைந்தளவு உறுப்பினர்களுடன் மாநகர சபையின் மாதாந்த அமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் புதிய முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் தலைமையிலான முதலாவது மாநகரசபை அமர்வு நேற்று திங்கட்கிழமை நான்கு கட்சிகளின் ஆதர வுடன் இடம்பெற்றது.

யாழ். மாநகர முதல்வராக இம்மானுவல் ஆனல்ட் உள் ளூராட்சி ஆணையாளரால் வெளியிடப்பட்ட வர்த்தமானி மூலம் முதல்வராக கடமை களை பொறுப்பேற்றுக் கொண் டார்.

முதல்வரின் பதவியேற்பு இலங்கை அரசியலமைப்பு மற்றும் மாநகர கட்டளைச் சட் டங்களை மீறுவதாகத் தெரி வித்து யாழ்.மாநகர சபை உறுப்பினர் 11

### வாயால் இரத்தம், நுரை வெளியேறிய
## 3 மாத பெண் குழந்தை மரணம்
### கரவெட்டியில் சம்பவம்

(கரணவாய்)

வாய்ப்பகுதியிலிருந்து இரத்தம் மற்றும் நுரை வெளியேறிய 11

## வீதி விபத்து; முதியவர் மரணம்

(கரணவாய்)

துவிச்சக்கரவண்டியில் சென்றவரை மோட்டார் சைக் கிள் மோதித் தள்ளியதில் படுகாயங்களுக்குள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலை 11

## சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை யாழ்.போதனாவில் வெற்றி
### பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி



(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் மேற் கொள்ளப்பட்ட சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை வெற்றியளித்துள்ளமையானது ஒரு வரலாற்று சாதனை என யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்திய மூர்த்தி தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணம் போதனா 11

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில்
### வேலன் சுவாமிகள் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

தமது பாதுகாப்பினை உறு திப்படுத்துமாறு கோரி மனித உரிமைகள் ஆணைக்குழு வில் வேலன் சுவாமிகளால் முறைப்பாடு செய்யப்பட்டுள் ளது.

வேலன் சுவாமிகள், காணா மல் ஆக்கப்பட்டவர் களின் உறவினர்கள் 11

## மின்சார சபைக்கு எதிராக உயர்நீதிமன்றில் வழக்கு தாக்கல்
### மனித உரிமைகள் ஆணைக்குழு அதிரடி

மின்சார சபைக்கு எதிராக உயர் நீதிமன்றில் மனித உரி மைகள் ஆணைக்குழுவால் நேற்று வழக்கு தாக்கல் செய் யப்பட்டுள்ளது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர், இலங்கை மின்சார சபையின் தலைவர், இலங்கை பெற் றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆகியோருக்கு எதி ராக இலங்கை மனித உரிமை கள் ஆணைக்குழு உயர் நீதி மன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கை தாக்கல் செய்தது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளிமண்டலவியல் திணைக்களம் மீனவர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை


(கொழும்பு)

வங்காள விரிகுடாவின் தென்கிழக்கு கடற்பிராந்தியத்திற்கு மேலாக நிலை கொண்டுள்ள தாழமுக்கம் குறித்து வளிமண்டலவியல் திணைக்களம்மீனவர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இதன் படி திருகோணமலை, பொத்துவில் மற்றும் காங்கேசன் துறை ஊடாக செல்லும் கடற்பிராந்தியங்களில் கடற்றொழிலில் ஈடுபடவேண்டாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் தாக்கம் நாட்டில் உள்ள கடற்பிராந்தியங்களில் அதிகமாக இருக்கும் என்பதால் இன்று முதல் மீன்பிடி மற்றும் கடற்றொழிலில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதனை தவிர்க்குமாறு மீனவர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532


## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை திருமதி தேய்வேந்திரகுமாரன் வசந்தி அவர்களின் அன்புத் தந்தையார்

பர்னாந்து யோசப் அன்ரனி அவர்கள்

காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம் கொக்குவில் இந்துக்கல்லூரி.

(C-5870)


# 13ஆவது திருத்தம் அமுலாவதை சீர்குலைக்க வேண்டாம்

## அத்துரலியே ரத்ன தேரரிடம் குமார வெல்கம கோரிக்கை

(கொழும்பு)



13வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் நடைமுறைப் படுத்துவதை சீர்குலைத்து நாட்டை தொடர்ந்தும் அழிக்க வேண்டாம் என அத்துரலியே ரத்ன தேரரிடம் கோரிக்கை விடுப்பதாக நவ லங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அண்மையில் நடைபெற்ற சர்வக்கட்சி மாநாடு தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அத்துரலியே ரதன தேரர் உள்ளிட்ட தரப்பினரின் தவறான ஆலோசனைகள் மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ அரசின் முரட்டுத்தனமான கொள்கையை நடைமுறைப்படுத்தியதன் காரணமாகவே நாட்டு மக்களுக்கு தற்போது சாப்பிடவும் வழியில்லாமல் இருக்கின்றது.

இந்த நிலையில், தற்போது 13வது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதை சீர்குலைத்தால் நாடு அழிவின் விளிம்புக்கு செல்வதை தவிர்க்க முடியாது.

அரசியல் நோக்கங்களுக்காக நாட்டை அழிவுக்குள் தள்ள முடியாது. இனங்களுக்கு இடையில் சகவாழ்வை ஏற்படுத்துவது இந்த சந்தர்ப்பத்தில் அத்தியவசியமான விடயம்.

ரத்ன தேரரை நாங்கள் மதிக்கின்றோம். எனினும் உங்களை போன்றவர்கள் காரணமாக தற்போது நாட்டில் சாப்பிடவும் எதுவுமில்லை. இரசாயன பசளை தடை செய்யப்பட்டதால் ஏற்பட்ட நிலைமையால் போஷாகின்மை அதிகரித்துள்ளது என்றார். (ம-7)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன்

கௌரீஸ்வரன் கபிசயன்

(கிளி/முகமாலை ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை)

2022ஆம் ஆண்டு நடைபெற்ற தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சையில் 147 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த கௌரீஸ்வரன் கபிசயன் அவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு அவர் சித்திபெற கற்பித்த அதிபர், ஆசிரியர்களுக்கும் மற்றும் அவருக்கு உறுதுணையாக இருந்த கிராம மக்கள், அயலவர்கள் உறவினர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர் :- அம்மா, அப்பா, சைனியா, அம்மப்பா, அம்மம்மா, மாமா, அத்தை, பெரியன்ரா சின்னன்ரா, தேஸ்மிகா, ருத்விகா. (14456)



## கண்ணீர் அஞ்சலி



கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவு மகளிர் அபிவிருத்தி நிலைய தையல் போதனாசிரியர்

திருமதி வரதராசா இன்பராணி

அவர்களின் அன்புத்தாயார்

அமரர் முருகேசு தங்கரத்தினம்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தார்க்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கம்.

(14455)



## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பிதழ்



கடந்த 04.01.2023 புதன்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர்

கதிரன் கந்தையா

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை 01.02.2023 புதன்கிழமை காலை 6.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனிததீர்த்தக்கரையில் கரைக்கப்படும். இந்நிகழ்விலும், 03.02.2023 அன்று நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெறும் சபிண்டீகரணம். மற்றும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கரம்பைக்குறிச்சி மேற்கு, வரணி. இங்ஙனம் - குடும்பத்தினர் (14451)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



1960ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மு/மூன்று முறிப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் (துணுக்காய் வலயம்) 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரீட்சையில் தோற்றி 145 புள்ளிகளைப்பெற்று பாடசாலையில் முதல் முறையாக சித்தியடைந்த

செல்வன்

தரனீஸ்வரன் தனுஜன் (145)

அவர்களைப்பாராட்டி வாழ்த்துவதோடு அவரை சித்திபெற கற்பித்த அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு மேலும் பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்

அப்பா-தரனீஸ்வரன் (அமரர்), அம்மா-ரூபானி, அம்மப்பா-செல்லத்துரை, அம்மம்மா-அற்புதராணி, மாமன்மார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணமார், அக்கா, தம்பி, தங்கை, மச்சான், மச்சான்அதிபர்-திரு.புண்ணியமூர்த்தி சுஜந்தன் ஆசிரியர்-திருமதி.ஜெயபாலன் சுதர்சினி, திருமதி சிசுரன் கவிதினி.

(C-5869)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### வாகன விபத்து

# கடந்த ஆண்டில் மாத்திரம் 2500 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

கடந்த ஆண்டு இடம் பெற்ற வாகன விபத்துக்களில் சுமார் 2500 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

கடந்த 2022 ஆம் ஆண்டில் 19,740 வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாகவும் இதில் 2371 விபத்துக்கள் உயிராபத்து ஏற்படும் வகையிலானவை எனவும் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள்களே அதிகளவில் விபத்துக்குள்ளாகியுள்ளன. அதிக வேகமாக வாகனத்தைச் செலுத்தியமையே அதிகளவான விபத்துக்களுக்கான காரணம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வாகன விபத்துக்களினால் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் காயமடைந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (4)

# உறுப்பினர்களின் கையொப்பம் வர்த்தமானிக்கு தேவையில்லை

## தேர்தல்கள் ஆணைக்குழு

**(கொழும்பு)**

**உள்ளூராட்சி சபைத் தேர் தல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் வர்த்தமானி அறிவித்தலில் கையொப்பமிட வேண் டிய அவசியமில்லை என தேசிய தேர்தல்கள் ஆணை க்குழு தெரிவித்து ள்ளது.**

ஊடகம் ஒன்றின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே தேசிய தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்களின் கையொப்பங்களுடன் கூடிய வர்த்தமானி அறிவித்தல் அச்சிடுவதற்காக இதுவரை அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படவில்லை என அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தது.

இந்தநிலையில் இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா இவ்வாறு தெரிவித்துள்ளார். (4-6)



# வறிய மக்களுக்கு உதவவே வரிகள் விதிக்கப்படுகின்றன

## நிதி இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

225 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் புதிய வரிகள் பொருந்தும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

புதிய வரிகள் மக்களைப் பாதித்துள்ளதை தாங்கள் அறிவதாகவும் எவ்வாறாயினும் அரசின் வருவாயை அதிகரிக்கவே வரிகளை உயர்த்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்தோடு கடன் வழங்குநர் மற்றும் சர்வதேச நாணயநிதியமும் இதனை பரிந்துரைத்துள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு மானியங்கள், உதவிகளை வழங்குவதற்காக அதிக வருமானம் உள்ளவர்களுக்கு வரி விதிக்கப்படுகிறது என குறிப்பி ட்டுள்ளார்.

எவ்வாறாயினும் நாட்டின் நிலைமை சீரடையும் போது, வரி விகிதங்களை மீள்பரி சீலனை செய்ய எதிர்பார்த்துள்ளதாக ரஞ்சித் சியம் பலாபிட்டிய தெரி வித்துள்ளார். (4)

# மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டால் பாணின் விலையும் உயரும்

## பேக்கரி உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)

மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டால் பாண் உள்ளிட்ட பேக்கரி உணவுப் பொருட்களின் விலை அதிகரிக்கும் என பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பேக்கரிகளின் மின்சாரக் கட்டணம் தற்போதைய விலையை விட இருமடங்காக அதிகரித்துள்ளது என அச் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் மீண்டும் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தினால் பேக்கரி தொழில் துறையால் அதனை தாங்கிக் கொள்ளவே முடியாது எனவும் தெரிவித்துள்ளனர்.

மா, முட்டை மற்றும் பிற பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் எரிபொருள் மற்றும் மின்சார கட்டணங்கள் அதிகரிப்பு காரணமாக பேக்கரி தொழில் பெரும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது.

இந்த நிலையில் மீண்டும் மின் கட்டணம் அதிகரிக்கப் பட்டால் பாண் உள்ளிட்ட பேக்கரி பொருட்களின் விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அவர் கூறியுள்ளார். (4)

# தேர்தலுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமே தவிர நடத்தப்படாது

## குமார வெல்கம

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமே தவிர தேர்தல் நடத்தப்படமாட்டாது. தேர்தலை நடத்தினால் படுதோல்வி அடைவது உறுதி என்பதால் அரசாங்கம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நிச்சயம் பிற்போடும் என பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் களுத்துறை மாவட்டத் தலைவர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முதலாவதாக கட்டுப்பணம் செலுத்தியதைத் தொடர்ந்து உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அரசாங்கம் நடத்தாது என்பது உறுதியாகிவிட்டது.

அரசியலமைப்பின் பிரகாரம் தேர்தலை நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அவதானம் செலுத்தியுள்ளது. தேர்தலுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படும் என காண்பிக்கப்படுமே தவிர தேர்தல் நடத்தப்பட மாட்டாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவர் தலைமையிலான பொதுஜன பெரமுனவிற்கு மக்களாணை கிடையாது. தேர்தலை நடத்தினால் படுதோல்வி அடைவது உறுதி என்பதால் ஏதாவதொரு வழிமுறையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அரசாங்கம் பிற்போடும்.

உள்ளூராட்சிமன்றத் தேர்



தலுக்கு தயார் என மக்கள் மத்தியில் குறிப்பிடும் அரசாங்கம் தேர்தலை பிற்போட திரைமறைவில் இருந்து கொண்டு அரசியல் சூழ்ச்சி செய்கிறது. தேர்தலை பிற்போடலாம். ஆனால் மக்களின் அரசியல் தீர்மானத்தை பிற்போட முடியாது எனத் தெரிவித் (4-6)

# வாக்குச் சீட்டை அச்சிட 200 மில்.ரூபாய் செலவு

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதற்காக சுமார் 200 மில்லியன் ரூபாய் செலவிடப்படவுள்ளதாக அரச அச்சக அதிகாரி கங்கனி கல்பனா லியனகே தெரிவித்துள்ளார்.

அச்சு வேலைகளுக்காக பயன்படுத்தப்படும் காகிதம், மை போன்றவற்றின் விலைகள் அதிகரித்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், வாக்குச் சீட்டுகளின் முதற்கட்ட அச்சிடும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4)

# முதல் காலாண்டு இறுதியில் ஐ.எம்.எப் கடன் வசதி

## அரசாங்கம் நம்பிக்கை

(கொழும்பு)

சர்வதேச நாணயநிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதிகளுக்கான அங்கீகாரம் முதல் காலாண்டின் இறுதியில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல சீர்திருத்தங்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லூர் சாரங்கம் இசை மன்றத்தின் ஸ்தாபகர் ஸ்ரீமதி வாசஸ்பதி ரஜீந்திரன் அவர்களின் மணிவிழா வாழ்த்து



## திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் அவர்களின் இசைத்துறை ஈடுபாடும் இனிய வாழ்வும்

வாழ்வியல்!

இறைவனால் படைக்கப்பட்ட கொடைகளுள் கலையும் ஒன்றாகும். ஆடலரசனின் அரங்கத்தை அணிசெய்யும் கலைகளில் ஒன்றாகிய பாடற் கலையெனப் பேசப்படுகின்ற சங்கீதத் துறையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி குரலிசைக்கென தனியாக இடம்பிடித்தவர்களுள் சாரங்கத்தின் ஆணிவேர் வாசஸ்பதி என்றால் மிகையாகாது.

கைத்திறனால் கலை படைக்கும் ஆற்றல்மிக்க தவில் வித்துவானாக மிளிர்ந்த குமாரசுந்தரம் பாலாம்பிகை தம்பதியருக்கு மகளாக அவதரித்தார் வாசஸ்பதி அவர்கள். கலைஞர்களால் பெரும் புகழ் பெற்ற யாழ்ப்பாணம் அளவெட்டி என்னும் ஊரில் கலைக்குடும்பத்தின் ஓர் கலைத்துவ அங்கமாக அவதரித்த இவருடன் ரதி, வதனி, ரஞ்சினி, தர்மவதி, கேமவதி, நீதிமதி ஆகியோர் உடன்பிறப்புக்களாய் மலர்ந்தனர்.

ஆரம்பக் கல்வியை அளவெட்டி சீனன் கலட்டி ஞானோதயா வித்தியாலயத்தில் கற்ற இவர் உயர் கல்வியை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் கற்றார். உயர்தரத்தில் கர்நாடக சங்கீதத்தை ஒரு பாடமாக பயின்று இராமநாதன் நுண்கலைப் பீடத்திற்குத் தெரிவாகி "இசைக் கலைமணி" என்னும் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

சிறந்ததொரு இசைத்துறை வித்தகியாகத் திகழ்ந்த அம்மையார் இலங்கை வானொலிப் புகழ் பிச்சையப்பா நாதஸ்வர வித்துவானின் மகனாகிய நாதஸ்வர வித்துவான் ரஜீந்திரன் என்பவரை இல்லறத் துணைவராக ஏற்றுக் கொண்டார்.

நாதமும் கீதமும் ஒன்றுசேர்ந்த நல்லெழில் குடும்பமாக இவர்கள் இருவரும் இணைந்தனர்.

இவர் தம் குழந்தைகளாக யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை பட்டதாரி ஸ்வர சாகித்தியன் அவர்களும் அமரத்துவமடைந்த சாரங்கன் அவர்களும் மலர்ந்தனர். ஸ்வரசாகித்தியன் அவர்கள் பெற்றோரின் இசைப் பயணத்துக்கு உறுதுணையாகச் செயற்படுவதுடன் சிறப்புமிகு இசையாற்றல்மிக்கவராகவும் விளங்குகின்றார். பிஞ்சு மகள் சாரங்கி அவர்கள் உதிர்ந்த பூவானார். மகளின் பிரிவு இவர்களை பெரும் துன்பத்தில் ஆழ்த்தியது ஆயினும் இசையால் திளைத்த இக்குடும்பம் சாரங்கியின் பெயரில் "சாரங்கம் இசை மன்றத்தை" உருவாக்கி தமது இசைப் பயணத்தை தொடர்கின்றது.

## இசைப் பணியின் ஏணிகள்

இசைக்குயிலாக இசைத்துறை நாயகியாக விளங்குகின்ற மணிவிழா நாயகி வாசஸ்பதி அவர்களின் இசைப்பயணத்திற்கு குருவாக விளங்கியவர் சங்கீத வித்துவான் A.K.கருணாகரன் அவர்கள் ஆவர். இவர் வாசஸ்பதி அவர்களிற்கு இசை பற்றிய நுணுக்கங்களை கற்பித்து அத்துறையில் மேலும் ஆர்வம் ஏற்பட காரணமாக இருந்துள்ளார். மேலும் அளவெட்டி மல்லிகாதேவி, கமலாதேவி (சகோதரிகள்) ஆகியோர் இவரின் ஆரம்பகால குருவாக விளங்கியுள்ளனர்.

அத்துடன் உடன் பிறந்த சகோதரி வதனி ஸ்ரீதரன், செல்வி யோகாம்பிகை அவர்களிடமும் இசைத்துறை சார்ந்த கல்வியையும் தெளிவினையும் பெற்றுள்ளார். அன்று முதல் இன்று வரை குருவாக விளங்கியவர் சங்கீத வித்துவான் A.K.கருணாகரன் அவர்கள். அத்துடன் யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தில் திரு.A.K.கருணாகரன், திரு.S.பத்மலிங்கம் திருமதி கிருஷ்ணானந்தசிவம், திரு.R.இராமநாதன், திரு.N.நவரத்தினம், திருமதி பரந்தாமன் போன்றோரிடமும் மிருதங்கக் கலையை திரு. N.சோமஸ்கந்தசர்மா, திரு.S.மகேந்திரம், திரு. S.சிதம்பரநாதன் ஆகியோரிடமும் கற்றுப் பட்டம் பெற்றார்.

## கல்வியுடன் இசைப் பணியில்

கல்வித்துறையில் Dip.in Music பட்டம் பெற்ற இவர் 1989 ம் ஆண்டு ஆசிரிய நியமனம் கிடைக்கப் பெற்று யா/பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலையில் இரண்டு வருடங்கள் இசையாசிரியையாக கடமையாற்றினார். பின்னர் தொடர்ந்து யா/வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஆசிரியையாக நீண்ட காலம் கற்பித்து வந்தார். தற்பொழுது யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் கற்பித்து வருகின்றார்.

மணி விழா நாயகியாகிய இவர் எண்ணிலா மாணவர்களின் குருவாக விளங்குகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆரம்ப இசை பற்றிய அறிவு இல்லாமலேயே வருகின்ற மாணவர்களையும் ஆற்றல் நிறைந்த மாணவர்களாக ஆக்கிய பெருமைக்குரிய ஆசிரியையாக இவர் விளங்குகின்றார். இவர் 34 வருட கால ஆசிரிய சேவையில் ஈடுபட்டார்.

இவரின் மாணவர்கள் உயர்தரத்தில் சங்கீதத்தை ஒரு பாடமாகக் கற்று A தரத்தில் சித்தி பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகுகின்றனர். 20 வருடங்களுக்கு மேலாக யா/வைத்தீஸ்வரா கல்லூரியில் இசை ஆசிரியையாகக் கற்பித்த இவர், பாடசாலையில் இடம்பெறும் சகல நிகழ்வுகளையும் முன்னின்று நடாத்தியதுடன் நிகழ்வுகளுக்கு மாணவர்களை தயார்படுத்தி சிறந்த கலை நிகழ்வுகளையும் மேடையேற்றியுள்ளார்.

கடமையும் கண்டிப்பும் அரவணைக்கும் தன்மையும் கொண்ட அம்மணி, யா/வைத்தீஸ்வரா கல்லூரியில் கற்பிக்கும் காலப்பகுதியில் 2006, 2008 ஆண்டுகளில் "லலித மஞ்சரி" என்ற நூலினை கவின்கலை மன்றத்தினூடாக வெளியீடு செய்வதற்கு காரணமாக இருந்தார். யாழ். மாவட்ட மாணவர்கள் மட்டுமன்றி குறிப்பாக வன்னி மாவட்ட மாணவர்கள் ஆசிரியரின் வீட்டில் தங்கியிருந்து இலவசமாகக் கல்வி கற்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் யாழ்.இந்தியத் துணைத்தூதரகத்திலும் இசை ஆசிரியையாகப் பணியாற்றியுள்ளார். மேலும் ஏழு ஸ்வரம் எனும் இரண்டு அறிவுரை நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

## இசை விருதுகள்

சிறப்புமிகு சங்கீத ஆசிரியையாக விளங்கும் வாசஸ்பதி அவர்கள் இலங்கையின் பல பாகங்களிலும் இசைக் கச்சேரிகளை நடத்தியுள்ளார். இசையினால் அனைவரையும் இணையவைக்கும் ஆற்றல் மிக்க இவ் இசையோடு இணைந்த வாழ்க்கையில் பல பாராட்டுக்களையும் பட்டங்களையும் பெற்றுள்ளார்.

அந்த வகையில் அவர் பெற்ற பட்டங்களும் கௌரவங்களும் வருமாறு.

- இசைக்கலைமணி (1984 -1988)
- கலாவித்தகர் (1986)
- இசையரசி (2004)
- இசைஞானமணி (2012)

மேற்படி பட்டங்களுள் "இசையரசி" பட்டமானது பெருமகான் அருட்கவி விநாசித்தம்பி அவர்களால் 2004ம் ஆண்டு அளவெட்டி ஸ்ரீ நாகவரதர் கோயிலில் வைத்து வழங்கப்பட்டது. இசைஞான மணி என்ற பட்டம் 2012ம் ஆண்டில் இந்து மதகுரு பீடத்தால் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இவற்றைவிட யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கம்பன் விழாவின் போது 2011ம், 2012ம் ஆண்டுகளில் சான்றோர்கள் முன்னிலையில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

27.08.2022 நல்லூர் சைவத் தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடலால் "செவ்வழி நயனம்" என்ற விருதும் 12.11.2022 இல் தமிழ்ச்சங்க நிறுவனத்தால் இசைத்துறைக்கான "சாதனையாளர் விருது" வழங்கப்பட்டது.

இவ் இசையரசி திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் அவர்கள் 30.01.2023 இல் ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வு பெறுகின்றார்.

இம் மணிவிழாக் காணும் நாயகியின் சேவை மென்மேலும் சிறக்கவும் அம்மையாரும் அவர் தம் குடும்பத்தினரும் தீர்க்க ஆயுளையும் சகல செல்வங்களையும் பெற்று வாழ வேண்டும் என நல்லைக் கந்தப்பெருமானின் பாதார விந்தங்களை வேண்டி நிற்கிறது சாரங்கம் இசை மன்றம்.

**தலைவர் - விக்னேஸ்வரி நரேந்திரா,**
**செயலாளர் - சாவித்திரிதேவி ரவிச்சந்திரன்,**
நல்லூர் சாரங்கம் இசை மன்றம்.

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி

இன்று மணிவிழாக் காணும் திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் அவர்கள் நல்லூர் மண்ணிற்கு சொந்தமானவர். இவரின் குடும்பம் நல்லை ஆதீனத்திற்கு தொன்று தொட்டு செய்த சேவைகள் அளப்பெரியது. உதாரணமாக இவரின் மாமனார் P.S பிச்சையப்பா அவர்கள்முதலாவது நல்லைக்குருமகா சந்நிதானத்தின் கதாபிரசங்கங்களிற்கு முகவீணை வாசித்த பெருமைக்குரியவர். அவரைத் தொடர்ந்து அவரின் கணவர் திரு.பிச்சையப்பா ரஜீந்திரன் மற்றும் புதல்வன் திரு.சுரசாகித்தியன் அவர்களும் நல்லை ஆதீனத்தின் பெரும் விழாக்களை தமது நாதஸ்வர இசையால் சிறப்பித்துக் கொண்டு வருகின்றனர்.

திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் நல்லூர்ப் பின் வீதியிலே சாரங்கம் இசை மன்றம் எனும் இலவச இசைப் பயிலகத்தை நிறுவி எந்த வித எதிர்பார்ப்புமின்றி எல்லோரும் இசை பயில வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் பரீட்சைகளுக்காக மாணவர்களை சிறந்த முறையில் ஆயத்தம் செய்தல், இசை சம்பந்தமான போட்டிகளுக்கு அனுப்புதல் போன்ற நற்காரியங்களை செய்து வருகின்றார். இந்தியத் துணைத் தூதரகத்தின் இசை வகுப்புக்கள் நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற காலத்தில்தான் அவரின் சங்கீத வகுப்புக்களை நேரடியாகக் காணும் வாய்ப்புக் கிட்டியது. கடினமான பெறுமதிமிக்க சங்கீத உருப்படிகளை மிகத் துல்லியமான குழைவுகளுடனும் மாணவர்களிற்கு ஏற்றாற்போலும் கற்பிப்பதை பார்த்து வியந்தும் பெருமையும் கொண்டிருக்கின்றேன்.

மணிவிழாக் காணும் திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் நல்லூர் மண்ணிற்கு கிடைத்த வரம்.

இவர் மென்மேலும் இசைத்துறைக்கு பல காரியங்களை செய்ய இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு இவருடைய பணி இடையறாது தொடர எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். (14454)

## செஞ்சொற்செல்வரின் ஆசிச் செய்தி

அளவெட்டித் திருவூர் பல அரியகலைஞர்களை எம் மண்ணுக்குத் தந்தது. கலையின்பமே நிலையின்பமாகக் கொள்ளும் கலைக்குடும்பத்தில் பிறந்த இசைக் கலைஞர் திருமதி ர.வாசஸ்பதி அவர்கள் அளவெட்டி மண்ணில் பிறந்த பெருமைக்குரியவர். சிறுபராயத்திலேயே மேடை ஏறிய கலைஞர். 1978ஆம் ஆண்டு நீர்வேலிக் கந்தசாமி கோவிலில் இவரது இசைக்கச்சேரியை முதலில் கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

ஒரு தனித்துவமான குரல்வளம் கொண்டவர். இராமநாதன் கல்லூரியில் திக்கம் செல்லையாபிள்ளையின் மகள் செல்வி அம்பிகை செல்லையாவிடம் முறையாகக் கற்றவர். கம்பன் விழா முதல் நல்லூர்த் திருவிழாக்கால இசை அரங்கில் இவரது இசையாற்றலைக் கண்டு பலரும் பாராட்டியதை யான் அறிவேன். தனது புதல்வியின் நினைவாக இலவச இசைப் பாடசாலையைத் தன் வீட்டில் நடாத்திப் பல கலைஞர்களை உருவாக்கிய பெருமை இவரைச் சாரும்.

நல்லூர்க் கந்தசாமி கோவில் ஆஸ்தான வித்துவான் திரு. பிச்சையப்பா ரஜீந்திரனைத் தன் நாயகனாகக் கொண்ட இவர் தனது மகனையும் இசைத்துறையில் இன்று பிரகாசிக்கச் செய்துள்ளார். அகவை அறுபது காணும் இசை வித்தகி ஸ்ரீமதி வாசஸ்பதி ரஜீந்திரன் மேலும் நிறைந்த சிறப்புகளுடன் தன்பணி தொடர துர்க்கை அம்மனைப் பிரார்த்தித்து நல்லாசி கூறி அமைகிறேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்**
**தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை**
**தலைவர், சிவபூமி அறக்கட்டளை**

## வாழ்த்துச் செய்தி

யா/கனகரத்தினம் ம.ம. வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றி அகவை அறுபதில் கால்பதிக்கும் எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய ஆசிரியர் திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்வடைகின்றேன். ஆசிரியர் அவர்கள் மிகுந்த அர்ப்பணிப்பும் கடமையும் கண்ணியமும் கொண்டவர். நேரமுகாமைத்துவத்தைக் கடைப்பிடித்து பாடசாலைக்கு நேரத்துடன் வருகை தருவதுடன் தனக்கு ஒப்படைக்கப்பட்ட பணிகளை மிகவும் சிறப்பாகவும் நேர்த்தியாகவும் செய்வதில் வல்லவர். அன்பு, அறிவு, அடக்கம் போன்ற பண்புகளைக் கொண்டதுடன் பெரியோர்களை மதிக்கும் பண்பும் கொண்டவர்.


தன்னலம் கருதாது சேவைபுரியும் சிறப்புமிக்க இவர் பாடசாலைப் பணிகளுடன் மட்டுமல்ல, பொதுப் பணிகளிலும் தன்னை அர்ப்பணிப்பவர். உலகம் போற்றும் உத்தமராக உலக நாடுகள் எங்கும் சென்று தனது சேவையை ஆற்றி வருகின்றார். தனது இல்லத்திலே சாரங்கம் இசை மன்றத்தை நிறுவி இலவசமாக இசையைக் கற்பித்து பரீட்சைகள், தேசிய மட்ட இசைப் போட்டிகளில் மாணவர்கள் வெற்றி பெற காரணமாயிருந்த ஓர் இசை ஆசிரியர் இவ் வருடமும் எமது பாடசாலை மாணவனை தேசிய மட்டத்திற்கு அனுப்பி முதலிடம் பெற வைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்க தொன்றாகும். இவ்வாறான சிறப்புக்கள் பொருந்திய ஆசிரியர் தனது அகவை நாளில் குடும்பத்துடன் சீரும் சிறப்புடன்வாழ எல்லாம்வல்ல இறைவன் அருள்பொழிய வேண்டி எனது ஆசிகளையும் கூறி நிற்கின்றேன்.

**திருமதி லூடேலிக்கா மகேஸ்வரன்**
**முன்னை நாள் அதிபர்**
**யா/கனகரத்தினம் ம.ம. வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் நீங்கா நினைவலைகள்







| 18 ஆம் மாதம் | 1 ஆம் ஆண்டு | 28 ஆம் ஆண்டு |
| --- | --- | --- |
| **நி.பரராஜசிங்கம்** | **செ.நித்தியானந்தம்** | **நி.அன்னலட்சுமி** |

திதி: தைமாத வளர்பிறை தசமி (31.01.2023)

## இறையடியில் சாந்தி பெறுக!

**கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்**
**எந்நாளும் நீவீர் எம்மனதில் உயிர் வாழ்வீர்!**
**மண் விட்டு நீங்கள் விண்ணுலகம் சென்றாலும்**
**கண் விட்டு மறையவில்லை கடந்தகால எண்ணங்கள்!**
**இறையடியில் சாந்தி பெற நிறைவான அஞ்சலிகள்!**

"அன்னவாசா", சண்டிலிப்பாய்

குடும்பத்தினர்

(14453)

# இராசிபலன்

31.01.2023
தை 17, செவ்வாய்க்கிழமை
தசமி பிற்பகல் 3.49 மணிவரை

ரோகினி பின்னிரவு 3.54 மணிவரை
சுபநேரம் -11.06-12.36 மணிவரை
இராகுகாலம் -3.36-5.06 மணிவரை

சந்திராஷ்டமம்
விசாகம்

வளவன்

**மேஷம்**
சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு, துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வாய்ப்புண்டு.

**கடகம்**
பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், அதிஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் வாய்ப்புண்டு.

**துலாம்**
சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், எடுத்த காரியங்களில் தடைதாமதங்கள் ஏற்படலாம்.

**மகரம்**
மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும், பிறருக்கு உதவமுற்படுவீர்கள்.

**ரிஷபம்**
திட்டமிட்ட காரியமொன்றில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம்.

**சிம்மம்**
செய்தொழில் மேன்மையுண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், சிறப்பான நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்**
இரவு-பகலாக பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்**
மனதில் தோன்றுவதை செய்வீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், தாய்வழி ஆதரவு பெருகும் நாள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்**
தொழிலில் சிறு மாற்றங்கள் செய்யும் எண்ணம் உருவாகும், குடும்ப பெரியவர்களின் ஆலோசனையை கேட்டு நடப்பது நல்லது, சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**கன்னி**
தொழிலில் இருந்த எதிர்ப்புக்கள் மாறும், புதிய திட்டங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும்.

**தனுசு**
பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, தேக நலனில் தெளிவு பிறக்கும், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், செய்தொழில் மேன்மையுண்டு.

**மீனம்**
முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

சீற்றமுள்ள மனைவியும் நாற்றமுள்ள மனையும் நரகமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் மகாத்மா காந்தியின் 75 ஆவது நினைவு தினம் அனுஷ்டிப்பு



(அராலி)

யாழ். இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் மகாத்மா காந்தியின் 75 ஆவது நினைவு தினம் நேற்று யாழ்ப்பாண மருத்துவமனை முன்றலில் உள்ள மகாத்மா காந்தியின் சிலையில் முன்னெடுக்கப்பட்டது.

நினைவு தின நிகழ்வில் மகாத்மா காந்தியின் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந் நிகழ்வில் யாழ். இந்திய துணைத்துதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கர், யாழ்ப்பாண பல்கலைக்கழக துணை வேந்தர், யாழ். இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(4-6-104)

# திவாலான தேசம் என்ற முத்திரை விரைவில் அகற்றப்படும் - மனுச

(கொழும்பு)

இலங்கைக்கு ஏற்பட்ட அவப் பெயரை அடுத்த சில மாதங்களில் நீக்க முடியுமென தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுச நாணயக்கார நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

இலங்கை திவாலான தேசம் அல்ல என்றும் மீண்டும் எழுச்சி பெற்று புகழ் பெற்ற தேசமாக மாற்றம் அடையும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

திவாலான தேசம் என்ற முத்திரை விரைவில் அகற்றப்படும் என்றும் கடனை அடைக்க ஆரம்பிப்பதன் மூலம் புதிய முதலீடுகளை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இதன் மூலம் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கும் என்று கூறிய அமைச்சர், எதிர்காலத்தில் வரி, வங்கி வட்டி விகிதங்களும் குறையலாம் என்றும் எதிர்வுகூறியுள்ளார்.

எனினும் இவ்வாறான மாற்றத்தை பலர் விரும்பவில்லை என்றும் எனவே சிலர் நாச வேலையில் ஈடுபடுவதாக மனுச நாணயக்கார குற்றம் சுமத்தியுள்ளார். (4-6)

# ஹிருணிகா மீதான கடத்தல் வழக்கு பெப்ரவரிக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

இளைஞர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டமை தொடர்பாக ஹிருணிகா பிரேமசந்திரவிற்கு எதிரான வழக்கை பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு எடுத்துக் கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று தீர்மானித்துள்ளது.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இருந்த போதும் சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி, சாட்சியங்களை முன்னெடுப்பதற்கு மேலதிக அவகாசத்தை கோரினார்.

இதற்கு முன்னர் ஹிருணிகா பிரேமசந்திர மற்றும் பாடசாலை மாணவி ஒருவரை தவிர, கடத்தல் வழக்கில் குற்றத்தை ஒப்புக்கொண்ட மற்ற 7 பேருக்கு கொழும்பு உயர்நீதிமன்றம் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையை விதித்தது.

2015 டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி தெமட்டகொடைக்கு கறுப்புப் பாதுகாப்பு வாகனத்தில் (ஹிருணிகாவுக்கு சொந்தமான டிபெண்டர் வாகனம்) வந்த சிலர் தம்மை கடத்திச் சென்று தாக்கியதாக அமில பிரியங்கர என்பவர் குற்றம் சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6)

# நிதி மோசடியில் ஈடுபட்ட நபர் கைது

(கொழும்பு)

குருநாகல் பகுதியில் தானியக்க இயந்திர வாடிக்கையாளர்களை ஏமாற்றி அவர்களின் ஏ.டி.எம் இரகசிய இலக்கத்தை பெற்றுக் கொண்டு நிதி மோசடியில் ஈடுபட்ட 22 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குருநாகல் நகரத்தில் அமைந்துள்ள வங்கிகளின் ஏ.டி.எம் இயந்திரங்களுக்கு அருகில் காத்திருந்து பணத்தை வைப்பிலிட வரும் நபர்களை ஏமாற்றி ஏ.டி.எம் அட்டையின் இரகசிய இலக்கத்தை சந்தேகநபர் பெற்றுக் கொண்டுள்ளார்.

கொட்டிகாபால பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் குருநாகல் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன் குருநாகல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-6)





பிசப் சவுந்தரம் ஊடக மையத்தின் பிசப் ஜஸ்ரின் ஊடக நூலகம் 23 /25 பெரிய தோட்டம் பீச்றோட் யாழ்ப்பாணத்தில் நூல் தேட்டம் ஆசிரியர் மற்றும் நூலகவியலாளர் என்.செல்வராஜாவினால் அண்மையில் திறக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் இயக்குநர் கலாநிதி.ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரின் ஏற்பாட்டில் இந்த நூலகம் திறந்து வைக்கப்பட்டது. (படம்-சிவசாந்தன்)

# தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறிகள் தேக்கம்

(கொழும்பு)

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறிகள் மற்றும் பழங்களின் மொத்த விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும், சில்லறை விலைகளில் குறைவு ஏற்படவில்லை என வர்த்தகர்கள் குறிப்பிடுகின்றனர்.

இருப்பினும், அதிக அளவில் காய்கறிகள் கையிருப்பில் இருந்தும் அவற்றை கொள்வனவு செய்வதற்கு வியாபாரிகள் முன்வரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6)

# அதிகரிக்கும் கால்நடைகள் திருட்டு கட்டுப்படுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை

(கரணவாய்)

கரவெட்டி களிகைபுலம் பகுதியில் எண்பதாயிரம் ரூபாய் பெறுமதியான பசுமாடு ஒன்று களவு போயுள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு வீட்டில் கட்டி இருந்த வேளையில் குறித்த பசுமாடு களவு போயுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளர் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முறைப்பாடு செய்துள்ளார்.

அதேவேளை வடமராட்சி பகுதியில் தொடர்ச்சியாக கால்நடைகள் களவாடப்பட்டு வருகின்றது. இவ்வாறு இரவு வேளைகளில் கால்நடைகளை களவு எடுப்பவர்களை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கால்நடை வளர்ப்போர் தெரிவித்துள்ளனர். (4-6-60)

# போதை, மணற்கடத்தலுக்கு எதிராக சிறுவர்களால் விழிப்புணர்வு பேரணி





(கரணவாய்)

வடமராட்சி மணற்காடு திருப்பாலகள் அமைப்பு மற்றும் சிறுவர்கள் இணைந்து போதை, மணற்கடத்தல், காடழித்தலுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணி ஒன்றினை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மேற்கொண்டனர்.

மணற்காடு சவுக்கம் தோப்பு பகுதியிலிருந்து மணற்காடு தேவாலயம் வரை குறித்த விழிப்புணர்வு பேரணி முன்னெடுக்கப்பட்டது.

மரங்களை வெட்டி வளங்களை அழிக்காதே, மது போதையை கட்டுப்படுத்து, சட்டவிரோதமான மணல் அகழ்வை தடுத்து நிறுத்துங்கள் போன்ற பல்வேறு பதாகைகளை ஏந்திய வாறு சென்றனர்.

இதன் போது பேரணிக்கு பாதுகாப்பு வழங்கிய பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குறித்த கவனயீர்ப்புப் பேரணி மேற்கொண்ட பிள்ளைகளின் கோரிக்கைக்கு அமைவாக நாம் அடுத்த கட்ட நடவடிக்கையினை மேற்கொள்வோம் எனவும் தெரிவித்தார். (4-6-60)

# யாழ்.சாரண ஆணையாளராக பிரதீபன் நியமனம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சாரணர் மாவட்டத்தின் புதிய சாரண ஆணையாளராக யாழ்.மாவட்ட மேலதிக மாவட்ட செயலர் ம.பிரதீபன் நியமிக்கப்பட்டு உத்தியோகபூர்வமாக தனது கடமைகளை ஆரம்பித்துள்ளார்.

பிரதம ஆணையாளர் ஜனப்பிரித் பெர்னாண்டோவிடம் இதற்கான உத்தியோக பூர்வ சான்றிதழை நேற்று முன்தினம் பெற்றுக்கொண்டார்.

யாழ்.சாரணர் மாவட்ட ஆணையாளர் தவகோபால் ஓய்வு பெற்றமையினைத் தொடர்ந்து பிரதீபன் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு மூன்று பேர் பரிதாபப் பலி



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம் லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் பெவர்லி கிரெட்ஸ் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது.

அங்குள்ள ஒரு பங்களாவில் நடந்த விருந்து நிகழ்ச்சியின்போது இந்தத் துப்பாக்கிச் சூடு நடந்ததாக கூறப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் பலியானார்கள். 4 பேர் காயம் அடைந்தனர். பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து காயம் அடைந்தவர்களை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர்.

துப்பாக்கி சூட்டை நடத்தியது யார்? என்ன காரணம் போன்ற தகவல்களை பொலிஸார் வெளியிடவில்லை. கலிபோர்னியாவில் இந்த மாதத்தில் நடந்த 4 ஆவது துப்பாக்கி சூட்டுச் சம்பவம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.(4)



புலம்பெயர் தமிழர்களின் விடாமுயற்சியால், தை மாதம் தமிழ் மரபுத்திங்கள் என இங்கிலாந்து நகர சபையால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதை கொண்டாடும் வகையில், தமிழ் மொழியின் பெருமையையும் தமிழர்களின் கலை கலாசார பண்பாடுகளையும் எடுத்துக்காட்டும் மாபெரும் தமிழ் மரபுத் திங்கள் விழா இங்கிலாந்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

# ஜப்பானுடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதில்லை

## ரஷ்யா அறிவிப்பு

(மொஸ்கோ)

சர்ச்சைக்குரிய தீவுகளைச் சுற்றிய கடற்பகுதியில் ஜப்பானிய மீனவர்களை அனுமதிப்பது தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தப் போவதில்லை என ரஷ்யா தெரிவித்துள்ளது.

ரஷ்யாவிற்கு எதிரான நடவடிக்கைகளை ஜப்பான் எடுத்துள்ள நிலையில் பேச்சுவார்த்தைக்கு விரும்பவில்லை என ரஷ்யா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளது.

வடக்கு ஜப்பானிய தீவான ஹொக்கைடோவிற்கு அப்பால் உள்ள தீவுகள், ரஷ்யாவில் குரில்ஸ் என்றும், ஜப்பானில் வடக்குப் பகுதிகள் என்றும் அழைக்கப்படுகின்றன.

குறித்த தீவுகளுக்கு சுற்றிய கடற்பகுதியில் ஜப்பானிய மீனவர்களை அனுமதிக்கும் ஒப்பந்தத்தை ரஷ்யா கடந்த ஆண்டு தற்காலிகமாக நிறுத்தி வைத்தது.

இருப்பினும் மீன்பிடிக்கும் உரிமத்தைப் புதுப்பிப்பது குறித்து ரஷ்யாவுடன் ஆண்டுதோறும் பேச்சு நடத்த விரும்புவதாக ஜப்பான் கூறி வருகின்றது.

உக்ரைன் மீதான படையெடுப்பை அடுத்து, அமெரிக்காவின் முக்கிய நட்பு நாடான ஜப்பான், பல ரஷ்ய தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் மீது பொருளாதாரத் தடைகளை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# பாகிஸ்தானில் படகு கவிழ்ந்தது 10 சிறுவர்கள் உயிரிழப்பு

(இஸ்லாமாபாத்)

வடமேற்கு பாகிஸ்தானில் படகு கவிழ்ந்ததில் 10 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

மதரஸாவில் இருந்து நேற்று முன்தினம் 25 முதல் 30 மாணவர்களுடன் பயணம் செய்த படகே இவ்வாறு அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ளது.

பலியாகிய சிறுவர்கள் 7-14 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

11 பேர் ஆற்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும் இதில் ஆறு பேர் ஆபத்தான நிலையில் உள்ளதாக மீட்புப்பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதிக சுமை காரணமாக குறித்த படகு கவிழ்ந்திருக்கலாம் என விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# 50 ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டும் தோன்றும் வால் நட்சத்திரம்



(வோஷிங்டன்)

வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே காணக்கூடிய அரிய பச்சை வால் நட்சத்திரம் பூமிக்கு மிக அருகில் நாளை வரவுள்ளதாக வானியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

C2022E3 அல்லது ZTF எனும் இந்த வால் நட்சத்திரம் இறுதியாக 50,000 ஆண்டுகளுக்கு முன்பு நியண்டதால் மனிதனின் இறுதிக் காலத்தில் அவதானிக்கப்பட்டது.

இந்த பிரகாசமான பச்சை நிற வால் நட்சத்திரம் நாளை மற்றும் நாளை மறுதினம் பூமியில் இருந்து 45 மில்லியன் கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில், தென் திசையாக தொலைநோக்கியின் உதவியுடன் இதைப் பார்க்க முடியும் என்றும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இந்த வால் நட்சத்திரம் தற்போது நமது சூரிய மண்டலத்தின் வழியாக வேகமாக நகர்ந்து வருவதாக கூறப்படுகிறது. அதேசமயம் இந்த பச்சை நிற வால் நட்சத்திரம் 50,000 ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் தோன்றாது என்று பிரிட்டனின் கிரீன்விச் ரோயல் ஒப்சர்வேட்டரியின் வானியலாளர் கலாநிதி கிரெக் பிரவுன் தெரிவித்துள்ளார். (4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 4<br>கி.பா: சூரி 3 செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: CHEF (கனடா)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/10563 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 1<br>கி.பா: சூரி 6 செவ் 8 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: HND IT அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: G/8087 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>கி.பா: சூரி 6 செவ் 3 இல்<br>உயரம் : 5'7"<br>தகைமை/தொழில்: A/L தொழில்நுட்ப உத்தியோகத்தர் (அரச)<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/10569 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மகம் 4<br>கி.பா: 14 ½ சூரி 2 செவ் 10 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/ தொழில்:A/L(தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு: தகுந்த வரன்<br>தொ.இ: G/11923 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 3<br>கி.பா: சூரி 10 செவ் 6 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L (தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/10575 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 1<br>கி.பா: சூரி 3 செவ் 4 இல்<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: நிரந்தர தொழில்<br>தொ.இ: G/11937 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>கி.பா: சூரி 3 செவ் 7 இல்<br>தகைமை/தொழில்: A/L லண்டன்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/10578 | பிறப்பு: 1991 கிறிஸ்தவம் RC<br>உயரம் :5'4"<br>தகைமை/தொழில்: MBBS வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: G/11940 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 90





“இல்லை. ஒருவேளை அவன் நம்மவனாயிருக்கலாம் என்று நினைத்து விட்டேன். நீங்களே அனுப்பி வைத்தீர்களோ என்று எண்ணினேன்.”

“பெரிய பிசகு செய்து விட்டீர் அவன் நம்மவன் அல்ல. கட்டை யாய்க் குட்டையாய் இருப்பான் சண்டைக்காரன் பெயர் திருமலை யப்பன் ‘ஆழ்வார்க்கடியான்’ என்று சொல்லிக் கொள்வான்.”

“அவனேதான். நான் செய்த பிசகை இன்று மத்தியானம் நானே உணர்ந்து கொண்டேன் அவன் நம் ஆள் அல்லவென்று தெரிந்தது.”

“அதை எப்படி அறிந்தீர்?”

“நேற்று இரவு கந்தன்மாறனின் பாலிய நண்பன் ஒருவனும் கடம்பூர் மாளிகைக்கு வந்திருந்தான். அவ னுக்கும் பழுவேட்டரையர் கூட்டத் துக்கும் சம்பந்தம் ஒன்றுமில்லை யென்று தெரிந்தது. அவன் அங் கேயே மூலையில் படுத்து, நிம்மதி யாகத் தூங்கினான்.

இன்று காலையில் சின்ன எஜ மானர் தம் சிநேகிதனைக் கொண்டு விடக் கொள்ளிடக்கரை வரையில் வந்தார். அவர் வரப் போவதை அறிந்து அவர் முன்னால் அடிக்கடி நான் போய் நின்றேன் என்னையும் வரச் சொன்னார். அவர் கொள் ளிடத்தின் வடகரையோடு திரும்பி விட்டார்.

என்னைத் தென் கரைக்கு வந்து அவ்வாலிபனுக்கு ஒரு குதிரை சம்பாதித்துக் கொடுத்து விட்டுத் திரும்பும்படி சொன்னார். அங்கிருந்து குடந்தைக்குப் போய் என் அத்தை யைப் பார்த்து விட்டு வருவதாகச் சொல்லி விட்டு வந்தேன். அதனால் தான் சந்தேகத்துக்கு இடமின்றி இங்கே வர முடிந்தது.

“சரிதான், சரிதான்! அந்த வீர வைஷ்ணவனைப் பற்றி எவ்விதம் தெரிந்து கொண்டீர்?”

“கொள்ளிடத்தில் படகு புறப்படும் சமயத்துக்கு அந்த வீர வைஷ் ணவன் வந்து படகில் ஏறிக் கொண் டான். அவன் கந்தன்மாறனின் சிநேகிதனோடு பேசிய சில காரமான வார்த்தைகளிலிருந்து எனக்குச் சிறிது சந்தேகம் உதித்தது, அவனும் நம்மைச் சேர்ந்தவனோ என்று.

மேலும் கொள்ளிடத்தின் தென் கரையில் அவன் எனக்காக காத்துக் கொண்டிருந்ததாகத் தோன்றியது. நம்முடைய அந்தரங்க சமிக்ஞை யைச் செய்து காட்டினேன். ஆனால் அவன் புரிந்து கொள்ளவில்லை. அதன் பேரில் அவன் நம்மவன் அல்ல என்று தீர்மானித்தேன்”

“நீர் செய்தது பெரும் பிசகு! முன் பின் தெரியாதவர்களிடம் நம் சமிக் ஞையைச் செய்து காட்டக் கூடாது. நண்பர்களே! இதைக் கேளுங்கள் நம்முடைய காரியம் காஞ்சீபுரத்தில் இருக்கிறது. இலங்கையிலும் இருக் கிறது. இந்த இரண்டு இடங்களிலும் நம்முடைய பரம விரோதிகள் இருக் கிறார்கள். ஆனால் அவர்கள் இர ண்டு பேரையும் காட்டிலும் நம்மு டைய கொடிய விரோதி, முதன் மையான விரோதி, ஆழ்வார்க் கடியான் என்று பொய்ப் பெயர் பூண்டு திரியும் திருமலையப்பன் தான். அவன் நம்மையும் நம் நோக்கத்தையும் அடியோடு நாசம் செய்யக் கூடியவன்.

நமக்கெல்லாம் இணையில் லாத் தலைவியாக உள்ள தேவியை அவன் கொண்டு போகப் பார்க்கிறவன். அடுத்தபடியாக அவனை உங்களில் யாராவது எங்கே கண்டாலும் எந்த நிலை மையில் சந்தித்தாலும் கைகளில் உள்ள ஆயுதத்தை உடனே அவன் மார்பில் பாய்ச்சிக் கொன்று விடுங்கள்.

ஆயுதம் ஒன்றுமில்லாவிட்டால் கையினால் அவனுடைய மென்னி யைத் திருகிக் கொல்லுங்கள். அல்லது சூழ்ச்சியால் விஷத்தைக் கொடுத்துக் கொல்லுங்கள்.

அல்லது வெள்ளத்தில் தள்ளி முதலைப் பசிக்கு இரையாக் குங்கள். அல்லது ஏதாவது சாக்குச் சொல்லிப் பாறை உச்சிக்கு அழைத்துப் போய் அங்கிருந்து பிடித்துத் தள்ளிக் கொன்று விடுங் கள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## பரமார்த்த குரு கதைகள்



### பரமார்த்த குரு பரியேற்றம்

“வரியா? எதற்கு?” என வியந்தும் பயந் தும் நயந்தும் கேட் டார்கள் அவர்கள்.

“இந்தக் குதிரை யின் மேல் இந்த வழி யில் செல்வதற்கு ஐந்து பணம் ஆயம் கட்ட வேண்டும்” என்றான் அவன்.

“இது என்ன விந்தை? இந்தக் குதிரையே எங் களுக்கு இலவசமாகத் தான் கிடைத்தது. எங் கள் குருநாதருக்காக ஒரு புண்ணியவான் பெரிய மனசு வைத் துக் கொடுத்த காணி க்கை இது! இதற்குமா வரி?” என்று கேட் டான் மட்டி.

“ஆமாம். வரி கட் டித்தான் ஆகவேண் டும். வரி கட்டாமல் இந்த இடத்தை விட்டு ஓர் அடிநகர முடியாது நீங்கள்” என்றான் ஆயக் காரன் கடுமையாக,

“இது அக்கிரமம்! அடுக்காது! அநியாயம்!” என்று ஆளுக்கு ஆள் கொக்கரித்தார்கள்.

“அநியாயமோ... நியா யமோ எனக்குத் தெரி யாது. என் கடமை வரி வசூலிப்பது. கொடுக் காமல் போகவிட மாட் டேன்” என்று குறு க்கே நின்று கூச்சல் போட்டுத் தடுத்தான் அவன்.

குருவும் சிஷ்யர்க ளும் எவ்வளவோ கெஞ் சிக் கூத்தாடிப் பார்த் தார்கள். வரி வசூலிப் பவன் கொஞ்சமும் அசை ந்து கொடுக்கவில்லை.

அங்கிருந்து தப்பிப் போக முடியுமா வேறு வழியிருக்கிறதா என்று சுற்றிலும் நோட்டம் விட்டுப் பார்த்தார்கள். ஒரு வழியும் தோன்ற வில்லை. அவன் அவர் களை நீண்டநேரமா கத் தடுத்து நிறுத்தி வைத்தான்.

கடைசியில் “நாம் கொடாக் கண்டன்க ளாக இருந்தால் அவன் விடாக் கண்டனாகவே இருக்கிறான்” என்ப தைக் கண்டு கொண் டார்கள். மேலும் வாதா டிக் கொண்டிருப்பது வீண்தான் என்பது புரிந்தது அவர்களுக்கு.

“இது ஒரு வீண் தண் டம்” என்று மூக்கால் அழுது கொண்டே ஐந்து பணத்தை ஆயக்கார னிடம் கொடுத்துத் தொலைத்தார்கள். அதற் குப் பிறகுதான் அவன் அவர்களை மேலே நகர் வதற்கு அனுமதித்தான்.

பரமார்த்த குருவுக்கு மிகவும் வேதனையாகி விட்டது. இருக்கிற கொஞ்சப் பணமும் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து போகிறதே’ என்று அவர் வருந்தி னார். ‘இந்தக் குதிரை இல்லை என்றால் ஐந்து பணத்துக்கு நஷ் டம் வந்திருக்காதே! என்று எண்ணி எண் ணிக் கலங்கினார்.

இந்த வேதனையோடு அங்கிருந்து அவர்கள் புறப்பட்டார்கள். உட லைவிட உள்ளத்தில் அதிக வேதனை தெரி ந்தது அவர்களுக்கு. அருகே இருந்த ஒரு சிற்றூரை அடைந்தார் கள். அங்கே ஒரு சத் திரத்தைக் கண்டார் கள். சற்று இளைப்பா றிச் செல்லலாம் என்று அங்கே போனார்கள்.

அந்தச் சத்திரத்திலே இருந்த ஒருவன் அவர் கள் அருகே வந்தான். குருவுக்குத் தம் கஷ்ட த்தை யாரிடமாவது வாய்விட்டுக் கொட் டித் தீர்க்க வேண்டும் என்று தோன்றியது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியே ஆட்சியின் உயிர்.
நடுநிலைமையே நீதியின் உயிர்.
- ஜஸ்டினியன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பொலிஸாரின் ஆதரவுடனேயே அடாவடித்தனம் நடக்கிறது

கோஷ்டி மோதலில் ஈடுபட்டவர்களை உடனடியாகக் கைது செய்ய வடக்கு மாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உத்தரவு.

மீற்றர் வட்டி விவகாரம் உடன் விசாரணை நடத்த பொலிஸ் பொறுப்பதிகாரி பணிப்பு

என்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளி வருகின்றன.

இந்தச் செய்திகளைப் பார்க்கும்போது இஃது என்ன விசித்திரம் என்று நாம் நினைப்பதுண்டு.

அதாவது பொலிஸார் என்றால் அவர்கள் பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டியவர்கள்.

அநீதி இடம்பெறாமல் தடுக்க வேண்டியவர்கள். அப்பாவி மக்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டியவர்கள்.

சுருங்கக்கூறின், பொலிஸார் இருப்பதனால் நாம் அஞ்சத் தேவையில்லை என்ற நம்பிக்கையோடு பொதுமக்கள் இருக்க வேண்டும்.

தவிர, தம் மீது அடாவடித்தனம் நடத்தப்பட்டதாக யார் முறைப்பாடு செய்தாலும் அது தொடர்பில் விசாரணை நடத்தி விரைந்து நடவடிக்கை எடுப்பதுதான் பொலிஸாரின் கடமை.

இதை ஓர் உதாரணத்துடன் கூறுவதாயின், வைத்தியசாலையில் ஒரு நோயாளி அனுமதிக்கப்பட்டால் அவருக்கு விரைந்து சிகிச்சை அளிப்பதுதான் வைத்தியசாலையின் கடமை.

இதைவிடுத்து வைத்தியசாலைப் பணிப்பாளர் உத்தரவிட்டால் மட்டுமே குறித்த நோயாளிக்குச் சிகிச்சை அளிக்க முடியும் என்பதாக நிலைமை இருந்தால், அதன் விளைவு எவ்வாறாக இருக்குமென்பதை யாம் கூறி நீங்கள் யாரேனும் அறிந்து கொள்ள வேண்டிய தேவை இல்லை.

அந்த அடிப்படையில்தான் பொலிஸ் நிலையங்களின் கடமையும் இருக்க வேண்டும்.

ஆனால் இங்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டால் அல்லது அவர் கருசனை கொண்டால் மட்டுமே குற்றச் செயல்கள் குறித்து விசாரிக்கப்படும் என்ற நிலைமை இருப்பதை மேற்போந்த செய்திகள் வெளிப்படுத்துகின்றன.

உண்மையில் முறைப்பாடு ஒன்று கிடைத்து விட்டால் அது தொடர்பில் காலதாமதமற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இங்குதான் வல்லவர்களின் பம்பரம் பொலிஸ் நிலையங்களிலும் சுற்றுகிறது.

ஆம் நம் நாட்டில் - நம் தமிழர் தாயகத்தில் நடக்கின்ற அத்தனை அக்கிரமங்கள், அடாவடித்தனங்கள், கோஷ்டி மோதல்கள், குழுக்களின் தாக்குதல்கள், காணி மோசடிகள், கொடுக்கல் வாங்கல் பிரச்சினைகள் என அனைத்துக்கும் பின்னணியில் பொலிஸாரின் பங்கும் பணியும் இருப்பதை எவரும் மறுக்க முடியாது.

உண்மை. பொலிஸார் நேர்மையாகத் தமது கடமையைச் செய்வார்களாயின், எங்கள் மண்ணில் கோஷ்டி மோதல்களுக்கு இம்மியும் இடமில்லை.

சட்டவிரோத கொடுக்கல் வாங்கல்கள் சாத்தியமில்லை. காணி மோசடிகளுக்கு இம்மியும் இடமில்லை.

என்ன செய்வது நேர்மையான பொலிஸார் பலர் இருக்கின்ற போதிலும் குறுக்கு வழியில் பொருளீட்ட நினைக்கின்ற பொலிஸாரின் ஈனச் செயலினால் எத்தனையோ அப்பாவி மக்கள் நடுங்கி ஒடுங்கி வாழ்கின்றனர்.

தங்களுக்கு நடந்த கொடுமைகளை பொலிஸாரிடம் கூறப் பயப்படுகிறார்கள்.

எனவே நீதியை நிலைநாட்ட வேண்டும் என்று எந்தப் பொலிஸ் அதிகாரி நினைத்தாலும் அவரின் முதற்பணி அடாவடித்தனக் கும்பலுடன் தொடர்பைப் பேணுகின்ற - தகவல் பரிமாற்றம் செய்கின்ற பொலிஸாரைக் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும்.

இதைச் செய்தால் எங்கள் மண்ணில் எல்லோரும் நல்லவர்களாக மாறுவர், திருந்துவர் என்பது சத்தியமான உண்மை.

## தேர்தல் நடைபெறவுள்ள நேரத்தில்

# தேர்தல் ஆணைக்குழுவின் பதவிகளுக்கு விண்ணப்பம் கோருவது சட்டவிரோதமானது

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

தேர்தல் காலத்தில் வெற்றிடமாகவுள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் பதவிகளுக்கு விண்ணப்பம் கோருவது சட்டவிரோதமானது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாநகர சபை மேயர் வேட்பாளர் முஜிபுர் ரஹ்மான் உள்ளிட்ட வேட்பாளர்களுடன் இணைந்து சர்வ மதத் தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பிக்கும் நிகழ்வில் நேற்றுக் கலந்து கொண்ட போதே எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்று அரசியலமைப்பு பேரவை கூடியதாகவும், தேர்தல் நடைபெறும் வேளையில் தேர்தல் ஆணைக்குழுவிற்கு விண்ணப்பம் கோருவது அரசியல்விரோத செயல் என தான் தெரிவித்ததாகவும்,

ஏனைய ஆணைக்குழுக்களுக்கு இவ்வாறான விண்ணப்பங்கள் கோரப்பட்டாலும், தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அவ்வாறான விண்ணப்பங்கள் விடுக்கப்படுவதை அங்கீகரிக்க முடியாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தேர்தல் ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்களுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதால் அவர்களது வீடுகளுக்கு பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளதாகவும், இத்தகைய சூழ் நிலையில், அரசியலமைப்பு பேரவை, தேர்தல் ஆணைக்குழுவிற்கு அங்கத்தவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்களை கோருவது அரசியலமைப்பை மீறும் செயலாகும் எனவும், மார்ச் 9 ஆம் திகதிக்குப் பிறகு இதை கோருமாறு தான் கேட்டுக்கொண்டதாகவும்,

இதன் மூலம் தேர்தலை சீர்குலைக்க முயற்சிப்பவர்களுக்கு மேலும் மேலும் அரசியல் சதித்திட்டங்களில் ஈடுபட்டு தேர்தலை சீர்குலைக்க இது வாய்ப்பாக அமையும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் அரசியலமைப்புப் பேரவை மக்களின் இறையாண்மையையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்கேயன்றி மீறுவதற்கல்ல எனவும், இந்நேரத்தில் எவ்வகையிலும் தேர்தல் ஆணைக்குழுவிற்கு விண்ணப்பங்களைக் கோருவது அரசியலமைப்பை மீறும் செயலாகும் எனவும்,

அரசியலமைப்பு பேரவையின் இரகசியம் பேணப்படும் என வாக்குறுதியளித்த போதிலும், மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறும் அரசியலமைப்பு பேரவையின் சட்டவிரோத நடவடிக்கைகளை அங்கீகரிக்க முடியாது என்பதால், அந்த தீர்மானங்கள் குறித்து மக்களுக்கு வெளிப்படுத்துவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாட்டின் நிர்வாக செயற்பாடுகளில் தவறு செய்பவர்களுக்கு சிவில் சட்டத்தின்கீழ்தண்டனை வழங்க நீதித்துறை ஏற்பாடுகள் செய்துள்ளதாகவும், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான சிவில் வழக்கின் தீர்ப்பு இதற்கு சிறந்த உதாரணமாகும் என்பதனால், அரசியலமைப்பு பேரவை உறுப்பினர்கள் இவ்வாறான சட்டவிரோத செயல்களைச் செய்தால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எதிர்க்கட்சித்தலைவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ம-7)

# தான்சானியா ஜனாதிபதியின் தீர்மானம் இலங்கைக்கு ஒரு பாடமாக அமையும்

## மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர்

2022ஆம்ஆண்டுசுதந்திர தின கொண்டாட்டங்களை ரத்து செய்ய தான்சானியா ஜனாதிபதி எடுத்த தீர்மானம் இலங்கைக்கு ஒரு பாடமாக அமையும் என இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

தான்சானியாவில் கொண்டாட்டங்கள் ரத்து செய்யப்பட்டமை தொடர்பான செய்தி அறிக்கையைப் பகிர்ந்து கொண்ட விஜேவர்தன, கிழக்கு ஆபிரிக்கத் தலைவரிடமிருந்து இது ஒரு நல்ல பாடம் என்று டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார். அசோசியேட்டட் பிரஸ்ஸின் அறிக்கையின்படி, தான்சானியாவின் ஜனாதிபதி, சாமியா சுலுஹு ஹசன் 2022 ஆம் ஆண்டு சுதந்திர தின கொண்டாட்டங்களை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாக விசேட தேவையுடைய சிறுவர்களுக்கான விடுதிகளை கட்டுவதற்கு நிதி ஒதுக்கத்தை பயன்படுத்துமாறு உத்தரவிட்டார்.

அந்த நாட்டின் 61ஆவது சுதந்திர தின நிகழ்வுக்கு 445,000 ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. இந்தப்பணம் நாடு முழுவதும் உள்ள ஆரம்பப் பாடசாலைகளுக்கு எட்டு விடுதிகளை கட்டப் பயன்படுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், தான்சானியா கொண்டாட்டங்களை ரத்து செய்வது இது முதல்முறை அல்ல. 2015 ஆம் ஆண்டில், அப்போதைய ஜனாதிபதி ஜோன் மகுஃபுலி கொண்டாட்டங்களை ரத்து செய்தார்.

அதற்கான ஒதுக்கத்தை வணிகத் தலைநகரான டார் எஸ் சலாமில் ஒரு வீதியை கட்டுவதற்கு பயன்படுத்தினார். அவ்வாறே, 2020 ஆம் ஆண்டிலும், சுதந்திர தின கொண்டாட்டங்களை ரத்துசெய்து அதனை மருத்துவ பொருட்களை வாங்குவதற்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்று உத்தரவிட்டார்.

தான்சானியாவின் முதல் பெண் ஜனாதிபதி என்ற பெருமையை பெற்றுள்ள தற்போதைய ஜனாதிபதி ஹசன், அதனைபோலவே சுதந்திரதின கொண்டாட்டங்களை ரத்துசெய்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** ஒமினி அலுமினியம் தொழிற்சாலை-கரந்தன், நீர்வேலி, கரந்தன், போயிட்டி, பொக்கணை, ஊரெழு ஆகிய இடங்கிலும் **வவுனியா பிரதேசத்தில்** ஆசிக் குளம் ஆகிய இடத்திலும் **மன்னார் பிரதேசத்தில்** இறால் பண்ணை-பள்ளமடு, நெடுங்கடல் மொபிட்டல் கோபுரம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# ரின்மீன் உற்பத்தியில் இலங்கை தன்னிறைவு

## இறக்குமதி அவசியமில்லை

(கொழும்பு)

ரின் மீன் உற்பத்தியில் இலங்கை தன்னிறைவடைந்துள்ளதாக டெஸ் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், ரின் மீன் உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவருமான சிரான் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டுக்குத் தேவையான ரின் மீன்கள் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை முதன்முறையாக ரின் மீன் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துள்ளதாகவும் அவர் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் நாளாந்த ரின் மீன்களின் தேவை சுமார் இரண்டரை இலட்சம் எனவும், ஆனால் தற்போது உள்ளூர் தொழிற்சாலைகள் நாளொன்றுக்கு மூன்று இலட்சத்திற்கும் அதிகமான மீன் ரின்களை உற்பத்தி செய்வதாகவும் பெர்னாண்டோ சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே எதிர்காலத்தில் ரின் மீன்களை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஒருசில தமிழ் அரசியல்வாதிகளால் கைதிகள் விடுதலையில் தாமதம்"

## நீதியமைச்சரின் கருத்து தொடர்பில் செல்வம் எம்.பி. அதிருப்தி

(மன்னார்)

நாட்டின் நீதி அமைச்சராக இருக்கும் ஒருவர் அரசியல் கைதிகள் விடுதலை பற்றிய நீதிப் பொறிமுறைகளை அறியாதவராக இருக்கின்றாரா என்ற கேள்வி எழுகின்றது என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

ஊடகம் ஒன்றுக்கு நேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாட்டிலிருந்து வந்த பிரதிநிதி ஒருவருக்கு நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ நன்றாக கதை அளந்து இருக்கின்றார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு தடையாக ஒரு சில தமிழ் அரசியல்வாதிகள் இருப்பதாகவும் அவர்களுடைய ஒத்துழைப்பு இல்லாமையால் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய முடியாமல் இருப்பதாக கூறியிருப்பது விஷமத்தனமானது.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரில் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட முடியும் என்பதை பட்டியலிட்டு ஆதாரத்தோடு ஜனாதிபதியிடம் கடந்த ஆவணி மாத சந்திப்பிலே நாங்கள் கை அளித்திருந்தோம். அதன் பிரகாரம் 13 அரசியல் கைதிகள் வெளிவந்திருப்பது வரவேற்கத்தக்கது.

அதன் அடிப்படையில் மற்ற அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட முடியும் என்பதை அரசியல் யாப்பு தெளிவாக குறிப்பிட்டிருக்கிறது. வழக்கு நிலுவையில் இருப்பவர்கள் மாத்திரம் வழக்கை மீளப் பெற்ற பின்னர் விடுதலை செய்யப்பட முடியும் என்பதையும் சட்டம் சொல்கின்றது. இது இப்படி இருக்க சிறுபிள்ளைத்தனமான ஒரு புதுக் கதையை நீதி அமைச்சர் அளந்து இருப்பதானது அரசியல் கைதிகள் விடுதலையில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் பற்றிய சட்ட விவகாரங்களை அவர் அறிந்திருக்கவில்லையோ என்ற சந்தேகத்தை தோற்றுவிக்கின்றது எனத் தெரிவித்தார். (4-6-285)

# தியாகத்தைவிட நீதிக்காக போராடும் மக்களே தேவை

## பேராயர் கர்தினால்



(கொழும்பு)

கத்தோலிக்க மக்கள் நீதிக்காக போராட வேண்டும் என கர்தினால் மல்கம் ரஞ்சித் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இன்றைய திருச்சபைக்கு தியாகம் செய்யும் கத்தோலிக்கர்கள் தேவையில்லை. நீதிக்காகப் போராடும் பாமர மக்களே தேவை எனவும் கர்தினால் தெரிவித்துள்ளார்.

பொறளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

திருச்சபையின் பார்வையை நாங்கள் மாற்ற வேண்டும். எங்களுக்கு இனிமேல் தியாகம் செய்யும் கத்தோலிக்கர்கள் தேவையில்லை. சமூகத்தின் உரிமைக்காக வீதிக்கு இறங்கி நீதிக்காகப் போராடும் கத்தோலிக்கர்களே தேவை என அவர் தெரிவித்துள்ளார். (4)

# முல்லைத்தீவு பிரதி நீர்ப்பாசன பணிப்பாளராக விகிர்தன் நியமனம்

(அக்கராயன்)



முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராக சி.விகிர்தன் பொறுப்பேற்றுள்ளார். இவர் முன்பு நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் யாழ்.மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட வழுக்கையாற்றுத் திட்டத்தின் 2008, 2009 காலப்பகுதியில் நீர்ப்பாசனப் பொறியியலாளராக பணியாற்றி இருந் தார். பின்பு கிளிநொச்சி நீர்ப்பாசனப் பொறியியலாளராக பணியாற்றி இருந்தார். (4-6-350)

# 103 உறுப்பினர்களை தேர்வு செய்ய வவுனியாவில் 1,580 வேட்பாளர்கள்

(நெளுக்குளம்)

வவுனியாவில் 103 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 1,580 வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் இறங்கியுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள ஐந்து உள்ளூராட்சி மன்றங்களிலும் போட்டியிடுவதற்காக வேட்புமனுக்களை தாக்கல் செய்த 53 அரசியல் கட்சிகள் மற்றும் 13 சுயேட்சை குழுக்களினதும் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

அந்த வகையில் குறித்த கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களைச் சேர்ந்த 1,580 வேட்பாளர்கள் இம்முறை தேர்தலில் களம் இறங்கியுள்ள நிலையில் அவர்களைத் தெரிவு செய்வதற்காக 126,915 வாக்காளர்கள் தகுதிபெற்றுள்ளனர். (4-6-299)

# தொடரூந்து தண்டவாளங்கள் சீனாவில் இருந்து இறக்குமதி

(கொழும்பு)

தடம்புரள்வுகளை குறைக்கவும் தொடரூந்து சேவைகளை மேம்படுத்தவும் 45 அடி நீளமுள்ள 10,000 தொடரூந்து தண்டவாளங்களை சீனாவில் இருந்து இரண்டு மாதங்களுக்குள் இறக்குமதி செய்ய எதிர்பார்த்துள்ளதாக தொடரூந்து திணைக்களத்தின் பொது முகாமையாளர் டபிள்யூ.ஏ.எஸ். குணசிங்க தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக தொடரூந்து தடம்புரண்ட சம்பவங்களை கருத்திற் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு மாதங்களில் இறக்குமதிகள் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் புனரமைப்பு இடம்பெறும்போது தொடரூந்து பாதைகள் மூடப்படாது என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

தொடரூந்து தண்டவாளங்களை இறக்குமதி செய்ய ஒரு பில்லியனுக்கும் அதிகமாக செலவாகும் என எதிர்பார்க்கப்படுவதாக தொடரூந்து திணைக்களம் தெரிவித்துள்ளது. (4-6)

## வீதி விளக்குகளை சேதமாக்கிய விஷமிகள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு கணுக்கேணி கிராமத்தில் வீதி விளக்குகள் விஷமிகளினால் அடித்து நொறுக் கப்பட்டுள்ளன.

கரைதுறைப்பற்று பிரதேச சபையினால் பொருத்தப்பட்ட வீதி விளக்குகளே இவ்வாறு சேதமாக்கப்பட்டுள்ளன. (4-6-350)

## நுழைவு வாயில் வளைவு வாயிற்கதவு திறப்பு விழா

(அக்கராயன்)

முல்லைத்தீவு குமுழமுனை மகா வித்தியாலயத்தின் நுழைவு வாயில் வளைவு வாயிற்கதவு திறப்பு விழா இன்று காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் க.ஜெயவீரசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வினை முன்னிட்டு காலை 6 மணிக்கு மரதன் ஓட்ட நிகழ்வு நடைபெற உள்ளது. (4-6-350)

# பாராளுமன்றை ஒத்திவைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது

## டலஸ் அழகப்பெரும

(கொழும்பு)



தேர்தல் காலத்தில் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் நிறைவடைந்துள்ளமை, தேர்தலை நடத்துவதற்கான அரசாங்கத்தின் அச்சத்தை தெளிவாக வெளிப்படுத்துகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (4)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 220 | 200 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 350 | 300 |
| தக்காளி | 200 | 200 | 240 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 200 | 200 | 200 |
| கோவா | 80 | 80 | 100 | 100 |
| கரட் | 120 | 160 | 200 | 200 |
| பூசணி | 80 | 80 | 100 | 100 |
| புடோல் | 250 | 150 | 180 | 120 |
| வாழைக்காய் | 240 | 200 | 140 | 200 |
| சின்ன வெங்காயம் | 500 | 550 | 500-800 | 600 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 180 | 180 |
| பாகற்காய் | 250 | 300 | 350 | 400 |
| வெண்டிக்காய் | 300 | 300 | 250 | 320 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 400 | 400 | 400 | 300 |
| லீக்ஸ் | 300 | 300 | 300 | 350 |
| பீற்றூட் | 200 | 180 | 240 | 200 |
| கறிமிளகாய் | 600 | 700 | 600 | 600 |
| முருங்கைக்காய் | 1800 | 1600 | 1200 | 2000 |
| போஞ்சி | 300 | 300 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | — | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 100 | 100 |
| தேசிக்காய் | 40 | 70 | 50 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 90 | 40-80 | 70-100 |
| இராசவள்ளி | 300 | 300 | 350 | 250 |
| வெங்காயப்பூ | 160 | 160 | 300 | 300 |
| முள்ளங்கி | 40 | 60 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 50 | 25 | 50 | 50 |
| ஈரப்பலா | 80 | 160 | 150 | 160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடு முழுவதும்...

முகாமைத்துவ செயலகம் இணக்கம் தெரிவித்திருந்தது. இதன்படி இன்று மின்வெட்டு அமுலாக்கப்படமாட் டாது.

பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் விடுத்த கோரிக் கைக்கு அமைய மேலதிக நீர் வெளி யேற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக் கது. (ம-7)

## ஊடகவியலாளர்...

தன் உயிரிழந்துள்ளார்.

தெஹிவளைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் அவர் உயிரிழந் துள்ளதாக தெஹிவளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

தொழில் நிமிர்த்தம் காலி சென்று, ரயி லில் மீண்டும் திரும்பிக் கொண்டிருந்த போதே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

பயணித்துக் கொண்டிருந்த ரயிலின் கதவோரத்தில் இருந்து வீடியோ பதிவு செய்ய முயற்சித்தபோது, இந்த விபத்து நேர்ந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப் பிட்டனர். (ம-7,33,316)

## 3 மாத பெண்...

3 மாத பெண் குழந்தை ஒன்று மரண மடைந்துள்ளது.

காட்டுப்புலம் வளர்மதி கரவெட் டியைச் சேர்ந்த கஜேந்திரன் லாதுசா என்ற குழந்தையே மரணமடைந்த தாகும்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தாய் குழந்தைக்கு பால் கொடுத்து விட்டு குழந்தையை நித்திரையாக்கிய நிலையில் பின்னர் குழந்தையின் வாயி லிருந்து நுரை மற்றும் இரத்தம் கசிந்து காணப்பட்டது.

உடனடியாக மாலை 6.45 மணி அளவில் பருத்தித்துறை ஆதார வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் குழந்தை ஏற்கனவே உயிரி ழந்துவிட்டதாக வைத்தியர்களால் தெரிவிக்கப்பட்டது.

இம் மரணம் தொடர்பில் கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வே.பாஸ் கரன் விசாரணைகளை மேற்கொண் டார். (ம-7,60)

## உள்ளூராட்சி...

தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள் ளது.

பஃவ்ரல், கஃபே, சி.எம்.ஈ.வி , உள் ளிட்ட அமைப்புகளுக்கு தேர்தலை கண்காணிப்பதற்கு அனுமதி வழங்கப் படும் என தேசிய தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர், சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

எவ்வாறாயினும், 02 கண்காணிப்புக் குழுக்களுக்கு மாத்திரமே வாக்களிப்பு நிலையங்களுக்குள் கண்காணிப்பதற் கான அனுமதி வழங்கப்படுவதாக அவர் கூறினார்.

ஏனைய அமைப்புகள் வெளிப்புற கண் காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## குறைந்தளவு...

வரதராஜா பார்த்திபன் யாழ்.மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்த நிலையில் எதிர்வரும் ஆறாம் திகதி குறித்த வழக்கின் பிரதிவாதிகளை மன்றில் ஆஜராகுமாறு உத்தரவு பிறப் பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் நேற்றைய தினம் புதிய முதல்வர் தலைமையில் மாநகர அமர்வு இடம்பெறுமா? அல் லது கூட்டம் கோரமின்மையால் நிறுத் தப்படுமா? என்ற சந்தேகங்கள் நில விய நிலையில் காலை 10 மணியள வில் கூட்டம் ஆரம்பமானது.

கூட்டம் ஆரம்பமான நிலையில் மணி அணி உறுப்பினர்கள் சிலர் முதல்வர் தெரிவு தவறானது என்று தெரிவித்து சபை நடவடிக்கையில் இருந்து விலகி வெளியேறினர்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, ஐக் கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந் திரக் கட்சி உறுப்பினர்களின் ஆதர வுடன் சபை நடவடிக்கைகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33,104)

## வீதி விபத்து:...

யில் அனுமதிக்கப்பட்டிருந்த வயோதி பர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று திங்கட்கிழமை அதிகாலை உயிரிழந் துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் உரும் பிராய் தெற்கைச் சேர்ந்த நாகலிங்கம் கனகரட்ணம் (வயது-81) என்பவரா வார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை தனது வீட்டிலிருந்து மகள் வீட்டுக்குச் சென்று விட்டு மீண்டும் தனது வீட்டுக்கு சென்று கொண்டி ருந்தபோது மாலை 6.00 மணியளவில் உரும்பிராய்ப் பகுதியில் இவர் பய ணித்த துவிச்சக்கரவண்டியை யாழ்ப் பாணத்தில் இருந்து பலாலி நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று மோதித் தள்ளியுள் ளது.

இதில் படுகாயங்களுக்குள்ளான அவர் யாழ்.போதனா வைத்தியசாலை யில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டிருந்த நிலையில் நேற்று திங்கட் கிழமை அதிகாலை ஒரு மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள் ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற் கொண்டார். (ம-7,60)

## மனித உரிமைகள்...

இணைந்து ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா ஊடாக நேற்று திங் கட்கிழமை இலங்கை மனித உரிமை கள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் இந்த முறைப் பாட்டை பதிவு செய்துள்ளனர்.

கடந்த தைப் பொங்கல் தினத்தில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட தேசிய தைப்பொங்கல் நிகழ்விற்காக இலங் கையின் ஜனாதி பதி ரணில் விக் கி ர ம சி ங் க யாழிற்கு வருகை தந்திருந்த நிலை யில் அதற்கு எதிர்ப்புத் தெரி வித்து போராட்ட மொன்று முன் னெடுக்கப்பட்டி ருந்தது.

இந்நிலையில் பொலிஸாரின் க ட மை க் கு இடையூறு செய் ததாக போராட் டக்கார்களில் சிலரின் பெயர் களைக் குறிப் பிட்டு பொலிஸார் விசாரணைகளை ஆ ர ம் பி த் து வேலன் சுவாமி களை முதற்கட்ட மாக கைது செய்து நீதிமன் றில் முற்படுத்தி பிணையில் விடு வித்திருந்தனர்.

இதன் வழக்கு விசாரணைகள் இன்று நடை பெ ற வு ள் ள நி லை யி ல் வேலன் சுவாமி கள் உள்ளிட்ட வர்கள் தம்மீது நடத்தப்பட்ட தாக் குதல் சம்பவத் திற்கு நடவ டிக்கை எடுக்கக் கோரியும் தமக்கு பாதுகாப்பு வழங்க வே ண் டு மெ ன வலியுறுத்தியும் நேற்று முறைப் பாட்டைப் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக் கது.(ம-7,33,104)

## சிறுநீரக மாற்று...

வைத்தியசாலையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கை யில்,

கடந்த வாரம் 17 வயதுடைய பெண் பிள்ளை ஒருவருக்கு அவருடைய தாயார் சிறுநீரகம் தானமாக வழங்குவதற்கு முன்வந் திருந்த நிலையில் அதற்குரிய சத்திர சிகிச்சை யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் வைத் திய நிபுணர்களின் பங்கேற்போடு கடந்த 18ஆம் திகதி முன்னெடுக் கப்பட்டது.

போதனா வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைக் கூடத்தில் நான்கு மணித்தியாலமாக இடம்பெற்ற சிறு நீரகமாற்று சத்திரசிகிச்சையின் பின்னர் மிகவும் வெற்றிகரமான முறை யில் தாயாரின் சிறுநீரகம் 17 வயதுடைய பெண் பிள்ளைக்கு மாற்றப்பட்டுள் ளது.

இது ஒரு வரலாற்று மைல்கல் என யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் தெரிவித்திருந் தார். (ம-7,33,104)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 30/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1471
வெற்றி இலக்கங்கள்
துலாம் 5 5 9 4 0 2
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.01.30
சீட்டிழுப்பு இலக்கம் - 1046
W 19 22 40 45
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.01.30
சீட்டிழுப்பு இலக்கம் 3258
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
N 11 66 68 73
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 30/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1364
O 04 17 23 56 80

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.01.30
சீட்டிழுப்பு இலக்கம் 325
கும்பம் 01 03 09 29 கும்பம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/01/30
சீட்டிழுப்பு இலக்கம் 5016
L 6 7 0 6 4 0
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1991 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.01.30 தினம் திங்கட்கிழமை
P 29 47 49 64
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,480,340/-
DLB Web : www.dlb.lk

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.01.30
சீட்டிழுப்பு இல : 4152
வர்ணம் : இள நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,158,480/-
வெற்றி இலக்கங்கள்
02 05 28 35 B
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,770,672/-
திகதி 2023-01-30
வெற்றி வாரம் 3703
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் கன்னி
03 19 26 53
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,428,820/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 34 30 53 58 70
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1167
வர்ணம் பச்சை
திகதி 2023.01.30 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 302,085,672.20
DLB தொலை பேசி 011-2 333 546-47 Web : www.dlb.lk

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1892
சீட்டிழுப்பு திகதி 2023-01-30
வெற்றி இலக்கங்கள்
05 53 55 69 M
எதிர்வரும் சுப்பர் பரிசுப்போதி ரூ. 39,431,608.80
DLB தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல : 1817
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2023.01.30
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,061,160/-
வெற்றி இலக்கங்கள்
06 09 49 63 G
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் புதிய முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பில்

## இந்தியாவின் வி.ஜி.பி குழுமம் யாழில் ஆய்வு



(கொழும்பு)

வடமாகாணத்தில் புதிய முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பாக இந்தியாவின் பிரபல வி.ஜி.பி குழுமத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் முனைவர் கலைமாமணி செவாலியர் விஜி சந்தோஷம் தலைமையிலன உயர்மட்டக் குழு யாழ். மாவட்டத்திற்கு விஜயம் செய்து ஆராய்ந்துள்ளது.

யாழ்.நகரில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. சந்திப்பில் வடமாகாணத்தில் எவ்வாறான முதலீடுகளை மேற்கொள்ளலாம்? அதற்கான சாதக/பாதகங்கள் குறித்து பிரதானமாக ஆராயப்பட்டுள்ளது.

சந்திப்பில் யாழ்.இந்திய துணை தூதரகத்தின் தூதுவர் ராஜேஸ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், வடமாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.வாகீசன், சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன் புலவு சச்சிதானந்தம் ஆகியோரும் இந்திய தரப்பில், வி.ஜி.பி குழுமத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் முனைவர் கலைமாமணி செவாலியர் விஜி சந்தோஷம் தலைமையில் நீதியரசர் டிஎன் வள்ளிநாயகம், பேராசிரியர் உலகநாயகி பழனி, பேராசிரியர் திலகவதி, பேராசிரியர் புவனேஸ்வரி, வழக்கறிஞர் அப்துல் கனி, திருமதி கலைவாணி, திருமதி சரண்யா, திரு பீட்டர், முனைவர் பட்ட ஆய்வாளர் நாகப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ம-7,33,104)

# அரச நிறுவனங்களை மூட தீர்மானிக்கவில்லை

## பிரதமர் தினேஷ் குணவர்தன

(கொழும்பு)

எந்தவொரு அரச நிறுவனத்தையும் மூடுவதற்கு அரசாங்கம் இதுவரை தீர்மானிக்கவில்லை என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார மற்றும் சமூக நிலைமைகள் தொடர்பில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்ட போதே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுபோன்ற முடிவுகள் தனிப்பட்ட விருப்பங்கள் மட்டுமே. அரசு நிறுவனத்தை மூடுவது அல்லது முதலீட்டுக்குச் செல்வது அல்லது நிர்வாகத்தை மட்டும் ஒப்படைப்பது போன்ற பல்வேறு வழிமுறைகள் தற்போது விவாதிக்கப்பட்டு வருகின்றது.

இருப்பினும் பெரிய மாற்றங்களைச் செய்யாமல் தினசரி வருமானத்தை அதிகரிக்கக்கூடிய நிறுவனங்கள் மற்றும் அதற்கான நடவடிக்கைகள் குறித்து தனித்தனியாக விவாதிக்கப்பட்டு அமைச்சகங்கள் மூலம் நடைமுறைப்படுத்த வேண்டும்.

மறுசீரமைக்கப்படவுள்ள நிறுவனங்களை இலாபமாக மாற்றுவது இலக்குகளில் ஒன்று எனவும், தனது முன்மொழிவுகளை நிறைவேற்ற அனைத்து தரப்பினரின் ஆதரவையும் எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் தினேஷ் குணவர்தன மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

# பெண் வேட்பாளர்களுக்கு துன்புறுத்தல் அதிகரிக்கலாம்

## தேர்தல் கண்காணிப்பு அமைப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி தேர்தல் பிரச்சாரம் தீவிரமடையும் போது பெண் வேட்பாளர்களிற்கு எதிரான டிஜிட்டல்துன்புறுத்தல் அதிகரிக்கலாம் என தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

கபே அமைப்பு மேற்கொண்ட ஆரம்ப கட்ட கருத்துக்கணிப்பின் போது உள்ளூராட்சி மன்றங்களின் பெண் உறுப்பினர்களில் 70 வீதமானவர்களும் அடிமட்ட செயற்பாட்டாளர்களும் டிஜிட்டல் துன்புறுத்தல்களை எதிர் கொண்டுள்ளது தெரியவந்துள்ளது.

டிஜிட்டல் துன்புறுத்தலை எதிர்கொண்டவர்களில் 80 வீதமானவர்கள் பொலிஸாரிடமோ கட்சியின் தலைமையிடமோ இது குறித்து முறைப்பாடு செய்யவில்லை அவர்கள் இது பயனற்ற நடவடிக்கை எனக் கருதுவதே இதற்கு காரணம் என கபேயின் நிறைவேற்று பணிப்பாளர் மானாஸ் மக்கீம் தெரிவித்துள்ளார். பெண் அரசியல்வாதிகள் பொலிஸ் அல்லது தங்களின் கட்சி தலைமையிடம் இது குறித்து முறைப்பாடு செய்தாலும் எந்த பயனும் இல்லை அவர்களே தங்கள் தீர்வுகளை தாங்களே காணவேண்டியுள்ளது என தெரிவித்துள்ள அவர் பெண் வேட்பாளர்களுக்கான ஒதுக்கீட்டு முறை ஆண் வேட்பாளர்களிற்கு கோபத்தை ஏற்படுத்தி யுள்ளது இதன் காரணமாக அவர்கள் டிஜிட்டல் துன்புறுத்தல்களில் ஈடுபடுகின்றனர் என்வும் தெரிவித்துள்ளார்.

கருத்துக்கணிப்பின் போது 55 வீதமான பெண் அரசியல்வாதிகளும் செயற்பாட்டாளர்களும் தங்கள் அரசியல் வாழ்க்கையின் போது துன்புறுத்தல்களை எதிர்கொண்டுள்ளனர் என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது என கபே பணிப்பாளர் மானா மக்கீன் தெரிவித்துள்ளார். எனினும் டிஜிட்டல் துன்புறுத்தலே தற்போது வழமையான ஒன்றாக காணப்படு கின்றது எனவும் தெரிவித்துள்ள அவர் பாதிக்கப்பட்டவர்களில் 90 வீதமானவர்கள் தங்களின் கட்சியை சேர்ந்தவர்களே இதனை செய்கின்றனர் என கருதுவதாகவும் தெரிவித்துள்ளார். (ம-7)

# மன்னாரில் பேருந்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த கஞ்சா மீட்பு

(மன்னார்)

மன்னாரில் பேருந்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் 4 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சோதனை சாவடியில் வைத்து கேரள கஞ்சா பொதி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

மன்னாரிலிருந்து புத்தளம் நோக்கி புறப்பட்ட தனியார் பேருந்து ஒன்றில் கஞ்சா பொதிகள் இருப்பதாக தள்ளாடி இராணுவ தலைமையகத்திற்கு வழங்கப்பட்ட ரகசிய தகவலை அடுத்து நேற்று திங்கட்கிழமை மதியம் 12.00 மணியளவில் குறித்த தனியார் பேருந்து மன்னார் பிரதான பாலத்தடியில் உள்ள சோதனைச்சாவடியில் நிறுத்தப்பட்டு, மோப்ப நாயின் உதவியுடன் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது குறித்த பேருந்தின் பின் ஆசனத்திற்கு முன் பகுதியில் உள்ள ஆசனத்தின் கீழே காணப்பட்ட இரும்பு பெட்டியில் மறைத்து வைக்கப்பட்ட பொதி ஒன்றை எடுத்து சோதனை செய்தனர்.

இதன் போது குறித்த பொதியில் கேரள கஞ்சா இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சுமார் 380 கிராம் கேரள கஞ்சா இவ்வாறு குறித்த பொதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. குறித்த பேருந்தின் பின் இருக்கையில் இருந்த 4 பேரை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,285)

# இணையவழி முறையில் மின்கட்டணம் செலுத்தலாம்

(கொழும்பு)

இணைவழி (Online) மூலம் இலங்கை மின்சார சபைக்கு பணம் செலுத்தும் முறைமை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மின்சார சபை வெளியிட்டுள்ள அறிக்கையில், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக கடந்த நவம்பர் மாதம் முதல் இணைவழி (Online) முறையில் கட்டணங்களை செலுத்த முடியாமல் இருந்தது.

அதனடிப்படையில் எதிர்காலத்தில் இலகுவான முறையில் மக்களுக்கு கட்டணங்களை செலுத்த முடியும் என மின்சார சபை தெரிவித்துள்ளது. (ம-7)


IELTS - New Batch ஆரம்பம்
Sp.Offer 10% Discount உடன் Basic & Advance Grammar Classes, First Class (Free of Charge)
இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
077 798 9830 By:- B.MURALI
வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (14377)

வேலையாட்கள் தேவை
யாழ்.நகரிலுள்ள பிடவை விற்பனை நிலையத்திற்கு அனுபவமுள்ள பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர்கள் உடன் தேவை.
மேலும் சிட்டை போடுபவரும் வேண்டும்.
தொடர்புக்கு :-
077 748 8093
(14462)

பதவி வெற்றிடங்கள்
இல: 555, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். என்னும் முகவரியில் அமைந்துள்ள ஸ்ரீ மாருதி பதிப்பகத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு வேலை முன் அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பழக விரும்புபவர்கள் தேவை.
1. கணனி வடிவமைப்பாளர்
2. புத்தகம் கட்டுனர்
3. இயந்திர இயக்குநர் (Opset)
4. வரவேற்பாளர் (பெண்)
தொடர்புக்கு :-
077 791 7680
(C-5868)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14446)
076 825 7716 (ஆகாஸ்)

IELTS DMI COMPUTER EDUCATION 0777 17 35 17
#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 16)
Academic or General
IELTS Life Skills - A1
திருமணம் செய்து UK செல்வோருக்கானது
DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்
யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்
DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH
புதிய பிரிவு ஆரம்பம் 1/2/2023 Wed 9 am
நேரடி வகுப்புக்களாக
German - Germany ,Swiss நாட்டுக்கு செல்வோருக்கு Deutsch
French - France நாட்டுக்கு செல்வோருக்கு (C-5867)
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி 0777 24 07 07 021 222 4403
நெல்லியடி 021 226 2470 0777577333
சாவகச்சேரி 021 227 0775 0777227074
சுன்னாகம் 021 224 1970 0776032300
மானிப்பாய் 021 225 6665 0761354503
கிளிநொச்சி 021 228 5655 0776398096


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org